**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**
**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093815

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 8/2019 Date: நாள் 23-10-2019

2. (i) Act சட்டம்: 7 of Prevention of corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22-10-2019 Date from : நாள் முதல் மாலை 5.45 மணி முதல் Date to : நாள் வரை இரவு 10.00 மணி வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23-10-2019 காலை 11.00 மணி Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written ✓ / Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 43 கி.மீ. தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. இரா. தனகுமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1962 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந) மாவட்ட நிலை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திருமதி. த. ராணி (51/19), வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
   2. திரு. சந்தன மகாலிங்கம் (29/19), நில அளவையர், கீழராஜகுலராமன் பிர்கா, வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
   3. திருமதி ஜெயந்தி (34/19), இளநிலை வரைவாளர், வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   [illegible] தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 23.10.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலக பணியில் இருந்தபோது திரு. இரா. தனக்குமார், தனி வட்டாட்சியர் (ஆ.தி.த.) மாவட்ட தணிக்கை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் அவர்கள் என்னிடம் ஆஜராகி, ஒரு புகார் மனுவுடன் நேற்று 22.10.2019ம் தேதி மாலை 05.45 மணிமுதல் இரவு 10.00 மணிவரை வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்ததாக, அங்கு வைத்து தயார் செய்த அரசு செயல்முறை நடவடிக்கை அறிக்கையை இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் தி. பூமிநா....... பதவி கா.ஆ. ஆய்வாளர்நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. BOOMINATHAN
Rank: நிலை INSP. OF POLICE. No. எண்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.2019 at 12.00 hrs.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.8/2019 பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

அனுப்புநர், இரா.தனகுமார், தனிவட்டாட்சியர் (ஆ.தி.ந.), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள்: விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் மற்றும் அன்பளிப்பு பட்டாசு பெட்டிகள் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் நேற்று (22.10.2019) மாலை சுமார் 4.00 மணியளவில் விருதுநகர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் தீபாவளி திருநாளை முன்னிட்டு கல்குவாரி உரிமையாளர்களிடமிருந்தும், பட்டாசு கடை உரிமையாளர்களிடமிருந்தும் மாமூல் வசூல் செய்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில், விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி நான் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்து, விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டு காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்களுடன் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய இரண்டு பெண் காவலர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுடன் நேற்று (22.10.2019) மாலை சுமார் 4.30 மணிக்கு புறப்பட்டுச்சென்று வெம்பக்கோட்டை-ஆலங்குளம் ரோட்டிற்கு வடபுறம் உள்பகுதியில் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் நேற்று (22.10.2019) மாலை 5.45 மணிமுதல் இரவு 10.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டேன். அந்த திடீர் இணை ஆய்வில் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் திருமதி.த.வானதி (51/19) என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத பணம் ரூ.15,000/- மற்றும் அன்பளிப்பு பட்டாசு பெட்டிகள் 137 எண்ணங்கள், திரு.சந்தனமகாலிங்கம் (29/19), நிலஅளவையர், கீழராஜகுலராமன் பிர்கா, வெம்பக்கோட்டை தாலுகா என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத பணம் ரூ.9,600/- மற்றும் திருமதி.மு.ஜெயந்தி (34/19), முதுநிலை வரைவாளர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, வெம்பக்கோட்டை தாலுகா என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத பணம் ரூ.4,500/- ஆகியவை கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 22.10.2019ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு ஆரம்பித்து இரவு 10.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம்:- திடீர் இணை ஆய்வு செயல்முறை விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை-ஆலங்குளம் ரோட்டிற்கு வடபுறம் உள்பகுதியில் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு செய்ததன் விபர அறிக்கை நாள் 22.10.2019. 1.ஆய்வு செய்த அலுவலகம் : வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை-ஆலங்குளம் ரோடு வடபுறம், வெம்பக்கோட்டை, 2.ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் : 22.10.2019 ஆம் தேதி மாலை சுமார் 5.45 மணி, 3.ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர்: திரு.இரா.தனகுமார் (57/19), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர். 4.ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்: 1) திரு.இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர்., 2)செல்வி.கனீஸ்வரி (22/19), பெண் காவலர் 1580, ஆயுதப்படை, விருதுநகர், 3)திருமதி.கௌரி (28/19), பெண் காவலர் 3897, ஆயுதப்படை, விருதுநகர், 5.ஆய்வு செய்யப்பட்டபோது வட்டாட்சியர் அலுவலகத்தில் முதல்தளத்தில் இடதுபக்கத்தில் உள்ள பொதுப்பிரிவு மற்றும் வட்டாட்சியர் அறைகளில் இருந்த அரசு அலுவலர்கள்: 1)திருமதி.த.வானதி (51/19), வட்டாட்சியர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 2)திருமதி.க.பஞ்சவர்ணம் (49/19), தலைமையிடத்து துணை தாசில்தார், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 3)திருமதி.மாதா (41/19), மண்டல துணை வட்டாட்சியர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 4) திருமதி.இராஜலட்சுமி (32/19), உதவியாளர் அ2 பிரிவு, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 5)திருமதி.முத்துப்பிரியா (26/16), இளநிலை உதவியாளர் அ3 பிரிவு, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 6)திருமதி.திருப்பதி (34/19), உதவியாளர் அ5 பிரிவு, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 7)திரு.ரமேஷ்குமார் (47/19), முதுநிலை வருவாய் ஆய்வாளர் அ1 பிரிவு, தாலுகா

அலுவலகம், வெம்பக்கோட்டை, 8)திரு.கோபால்சாமி (55/19), முதுநிலை வருவாய் ஆய்வாளர் பி1 பிரிவு, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 9)திருமதி.மாரீஸ்வரி (41/19), பதிவறை எழுத்தர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 10)திரு.சிவராமசுப்பிரமணியன் (40/19), தனி வருவாய் ஆய்வாளர் (அகதிகள்), தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 11)திரு.சங்கரநாராயணன் (27/19), தட்டச்சர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 12)திரு.கருப்பசாமி (35/19), இரவுக் காவலர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 13)திரு.வீரன் (32/19), துப்புரவு பணியாளர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, ஆய்வு செய்யப்பட்டபோது வட்டாட்சியர் அலுவலகத்தில் இரண்டாம் தளத்தில் உள்ள நிலஅளவையர் அறையில் இருந்த அரசு அலுவலர்கள்:- 14) திரு.சந்தனமகாலிங்கம் (29/19), நிலஅளவையர், தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 15)திரு.மாரிமுத்து (40/19), வட்ட துணை ஆய்வாளர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 16)திருமதி.மு.ஜெயந்தி (34/19), முதுநிலை வரைவாளர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 17)திருமதி.ந.ராஜேஸ்வரி (27/19), குறுவட்ட அளவர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 6.ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த தனிநபர்: இல்லை, தீபாவளி திருநாளை முன்னிட்டு கல்குவாரி உரிமையாளர்களிடமிருந்தும், பட்டாசு கடை உரிமையாளர்களிடமிருந்தும் மாமூல் வசூல் செய்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 22.10.2019ஆம் தேதி மாலை சுமார் 5.45 மணிக்கு காலம் 3 மற்றும் 4 கண்ட அலுவலர்கள் சகிதம் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை-ஆலங்குளம் ரோட்டிற்கு வடபுறம் உள்பகுதியில் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம் தெற்கு வாசல் கொண்ட காம்பவுண்டிற்குள், தெற்கு வாசல் கொண்ட அரசு கட்டிடத்தில் இரண்டு தளங்களுடன் செயல்பட்டு வருகின்றது. மேற்படி கட்டிடத்திற்குள் இடதுபக்கம் 10 இருக்கைகள் கொண்ட வட்டாட்சியர் அலுவலக பொதுப்பிரிவு அறையும், அந்த அறைக்குள் நுழைந்தவுடன் இடதுபக்கம் ஒரு இருக்கை கொண்ட கணிணி பிரிவு அறையும், அதற்கடுத்தாற்போல் இடதுபக்கம் வட்டாட்சியர் உள்ள அறையும், முதல்தளத்தில் இடதுபக்கம் 6 இருக்கைகள் கொண்ட நிலஅளவையர் பிரிவு உள்ளது. மேற்படி கட்டிடத்திற்குள் இடதுபக்கம் 10 இருக்கைகள் கொண்ட வட்டாட்சியர் அலுவலக பொதுப்பிரிவில் காலம்-5ல் வரிசை எண்.1 முதல் 10 வரை உள்ள அலுவலர்கள் அவரவர் இருக்கைகளில் அமர்ந்து அவர்களது பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். அந்த அறையில் காலம்-5ல் வரிசை எண்.12 மற்றும் 13ல் கண்ட அலுவலர்கள் வட்டாட்சியர் அறைக்கு அருகில் நின்று கொண்டிருந்தனர். கணிணி பிரிவு அறையில் காலம்-5ல் வரிசை எண்.11ல் கண்ட தட்டச்சரும், வட்டாட்சியர் அறையில் காலம்-5ல் வரிசை எண்.1ல் கண்ட வட்டாட்சியரும் அவரவர்களது பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். அதேபோல் முதல்தளத்தில் நிலஅளவையர் பிரிவில் காலம்-5ல் வரிசை எண்.14 முதல் 17ல் கண்ட அலுவலர்கள் அவரவர் இருக்கைகளில் அமர்ந்து பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். காலம்-5ல் வரிசை எண்.1ல் கண்ட வட்டாட்சியரிடமும், தரைதளத்தில் உள்ள வட்டாட்சியர் பொதுப்பிரிவு மற்றும் முதல்தளத்தில் உள்ள நிலஅளவையர் பிரிவு ஆகியவற்றில் அவரவர் இருக்கைகளில் அமர்ந்து பணி செய்துகொண்டிருந்த காலம்-5ல் கண்ட வரிசை எண்.2 முதல் 17 வரை உள்ள பணியாளர்களிடமும் விபரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. வட்டாட்சியர் அறையில் அவரது இருக்கைக்கு வலதுபக்கம் அன்பளிப்பு பட்டாசு பெட்டிகள் சுமார் 137 எண்ணங்கள் இருந்தன. அந்த அன்பளிப்பு பட்டாசு பெட்டிகள் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர் அவை ரொக்கப்பணம் கொடுத்து வாங்கிய பட்டாசு பெட்டிகள் என்று கூறினார். எப்போது வாங்கினீர்கள் என்றும், எந்த பட்டாசு கடையில் ரொக்கப்பணம் கொடுத்து வாங்கினீர்கள் என்றும், ரொக்கப்பணம் கொடுத்து வாங்கியதற்கு இரசீது வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவரால் பதில் சொல்ல இயலவில்லை. எனவே அந்த அன்பளிப்பு பட்டாசு பெட்டிகள் தீபாவளி திருநாளை முன்னிட்டு பட்டாசு

உரிமையாளர்களிடமிருந்து அன்பளிப்பாக பெற்ற பட்டாசு பெட்டிகளாகத்தான் இருக்கும் என்று கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரது இருக்கை மற்றும் கைப்பை சோதனை செய்யப்பட்டது. அதில் வேறு பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் வட்டாட்சியர் திருமதி.வானதி அவர்களை ஆயுதப்படை பெண் காவலர்கள் மூலம் தனி அறையில் வைத்து சோதனை செய்யப்பட்டது. அந்த சோதனையில் அவர் அணிந்திருந்த ஜாக்கெட்டுக்குள்ளிருந்து கத்தை, கத்தையாக பணம் ரூ.15,000/- (2000x2 4,000, 500x22=11,000) இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த பணம்பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்தப்பணம் என்று கூறினார். சொந்தப்பணம் என்றால் தங்களது அலுவலகத்தில் உள்ள தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளீர்களா என்றும், அதை ஏன் நீங்கள் அணிந்திருக்கும் ஜாக்கெட்டிற்குள் கத்தை, கத்தையாக வைத்திருந்தீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், அலுவலகத்தில் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும் கூறி, ஜாக்கெட்டிற்குள் வைத்திருந்ததற்கு பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். ஆகையால் அந்த பணம் ரூ.15,000/- அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் கணிணி பிரிவு மற்றும் பொதுப்பிரிவில் இருந்த காலம்-5ல் கண்ட வரிசை எண்.2 முதல் 13 வரை உள்ளவர்களையும், அவர்களது இருக்கைகளையும், கைப்பைகளையும் சோதனை செய்து, அவரவர்களிடமிருந்த பணத்தை எடுத்து அவர்களிடம் கேட்க, அது அவர்களது சொந்தப்பணம் என்று கூறியதால், அந்த பணம் அவர்களது சொந்தப்பணம் என்று கூறுவதற்கு முகாந்திரம் இருந்ததால் அவரவர்களிடமே அந்த பணம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் முதல்தளத்தில் நிலஅளவையர் பிரிவில் இருந்த காலம்-5ல் கண்ட வரிசை எண்.14 மற்றும் 15 ஆகியோர்களையும், அவர்களது இருக்கைகள் மற்றும் கைப்பைகளையும் சோதனை செய்யப்பட்டது. அதில் வரிசை எண்.14ல் கண்ட நபரிடமிருந்து அவர் அணிந்திருந்த பேண்ட்டின் இரண்டு சைடு பாக்கெட்டுகளிலிருந்தும் தனித்தனியாக 100 ரூபாய், 200 ரூபாய், 500 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.9,600/- (2000x1 2,000, 500x13=6,500, 200x3=600, 100x5=500) மடித்துமடித்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதுபற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்தப்பணம் என்று கூறினார். சொந்தப்பணம் என்றால் அலுவலகத்தில் உள்ள தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளீர்களா என்றும், எதற்காக தனித்தனியாக ரூபாய் நோட்டுக்களை மடித்து இரண்டு சைடு பாக்கெட்டுக்களிலும் வைத்துள்ளீர்கள் என்றும் கேட்கப்பட்டது. அதற்கு அவர் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், தனித்தனியாக ரூபாய் நோட்டுக்களை மடித்து இரண்டு சைடு பாக்கெட்டுக்களிலும் வைத்துள்ளதற்கு விளக்கம் ஏதும் சொல்லமுடியாமல் மௌனமாக இருந்தார். ஆகையால் அந்த பணம் ரூ.9,600/-ம் அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் முதல்தளத்தில் நிலஅளவையர் பிரிவில் இருந்த காலம்-5ல் கண்ட வரிசை எண்.16 மற்றும் 17 ஆகியோர்களை ஆயுதப்படை பெண் காவலர்கள் மூலம் தனி அறையில் வைத்து சோதனை செய்யப்பட்டது. அவர்களிடமிருந்து வேறு பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவர்களது இருக்கைகளையும், கைப்பைகளையும் சோதனை செய்யப்பட்டது. அதில் வரிசை எண்.16ல் கண்ட நபரின் கைப்பையிலிருந்து தனித்தனியாக 100 ரூபாய், 500 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.4,500/- (2000x1=2,000, 500x4=2,000, 100x5=500) மடித்துமடித்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதுபற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்தப்பணம் என்று கூறினார். சொந்தப்பணம் என்றால் அலுவலகத்தில் உள்ள தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளீர்களா என்றும், எதற்காக தனித்தனியாக ரூபாய் நோட்டுக்களை மடித்து கைப்பையில் வைத்துள்ளீர்கள் என்றும் கேட்கப்பட்டது. அதற்கு அவர் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், தனித்தனியாக ரூபாய் நோட்டுக்களை மடித்து கைப்பையில் வைத்துள்ளதற்கு விளக்கம் ஏதும் சொல்லமுடியாமல் மௌனமாக இருந்தார். ஆகையால் அந்த பணம் ரூ.4,500/-ம் அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்திலுள்ள படைவீரர் கொடிநாள் வசூல் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பிரிவு உதவியாளரான காலம்-5ல் கண்ட வரிசை எண்.5ல் உள்ள அலுவலரிடம் கேட்க, படைவீரர் கொடிநாள் வசூல் தொகை நிலுவையில் ஏதும் இல்லை என்றும், வசூல்

செய்யப்படவேண்டிய ரூ.50/-க்கான படைவீரர் கொடிநாள் நிதி இரசீதுகள் மட்டும் (056841 முதல் 057000 வரை) உள்ளது என்றும் கூறினார். ஆகையால் அந்த படைவீரர் கொடிநாள் நிதி இரசீதுகளை திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பணப்பதிவேடு மற்றும் முன்பணம் கையிருப்பு பதிவேடு பற்றி காலம்-5ல் கண்ட வரிசை எண்.2ல் கண்ட அலுவலரிடம் கேட்க, அந்த பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். பின்னர் வட்டாட்சியர் திருமதி.வானதி, நிலஅளவையர் திரு.சந்தனமகாலிங்கம் மற்றும் முதுநிலை வரைவாளர் திருமதி.மு.ஜெயந்தி ஆகியோர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு இன்று (22.10.2019) இரவு 10.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று (22.10.2019) எனது தலைமையில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை-ஆலங்குளம் ரோட்டிற்கு வடபுறம் உள்பகுதியில் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் நடத்திய திடீர் இணை ஆய்வின்போது வட்டாட்சியர் திருமதி.த.வானதி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,000/- மற்றும் அன்பளிப்பு பட்டாசு பெட்டிகள் 137 எண்ணங்கள் ஆகியவை தீபாவளி திருநாளை முன்னிட்டு கல்குவாரி உரிமையாளர்களிடமிருந்தும், பட்டாசு கடை உரிமையாளர்களிடமிருந்தும் பெற்ற லஞ்சப்பணம் மற்றும் அன்பளிப்பு பட்டாசு பெட்டிகளாக இருக்கலாம் என கருதியும், திரு.சந்தனமகாலிங்கம், நிலஅளவையர், கீழராஜகுலராமன் பிர்கா, வெம்பக்கோட்டை தாலுகா என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.9,600/- மற்றும் திருமதி.மு.ஜெயந்தி, முதுநிலை வரைவாளர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, வெம்பக்கோட்டை தாலுகா என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,500/- ஆகியவை அன்றைய தினம் (22.10.2019) அவர்களை சந்திக்க வந்த பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதியும், அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கையுடன் இணைத்து இன்று 23.10.2019ம் தேதி காலை11.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (தனகுமார்) 23/X/19, தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந.), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர். Sir, Received a complaint and Registered a case in Virudhunagar V&AC Cr.No.8/19 u/s 7 of PC Act-1988 as amended in 2018 on 23.10.19 at 11.00 hrs. FIR and complaint are submitted to the Hon'ble CJM cum Spl. Judge, Srivilliputhur and copies submitted to the concerned officers (Sd)R.Boominathan, 23/X/19, Insp. of Police, V&AC, VNR.

Insp. of Police,
V&AC, VNR.